திரு. ஜே. மாதா கவுடர்: இந்த எப்பநாடு-மொரக்குட்டி ரோடுகளை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே தார் ரோடாகப் போட வேண்டும் என்று பொதுமக்களால் கோரப்பட்டு என்ஜினியர்ஸ் ஆபீசுக்கு வந்திருக்கிறது. அதிகாரிகள்தான் எவ்வித சிரத்தையும் எடுத்துக்கொள்வதில்லையென்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். உடனடியாக அந்த ரோடைத் தார் ரோடாகப் போடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும்படியாக கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா ?

கனம் திரு. வி. ராமைய்யா : உடனடியாகக் குற்றம் சாட்டுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ரோடுக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவு ஆகும். 'ப்ரையாரிடி' படி வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். எதை முன்னால் எடுத்துக் கொள்வது, எதைப் பின்னால் எடுத்துக்கொள்வது என்பதை டெவலெப்மெண்டு கவுன்சில் முடிவு செய்யவேண்டும். இந்த ரோடு விஷயமாக இன்னும் டெவலெப்மெண்டு கவுன்சில் முடிவு செய்யவில்லை. அதற்குள் அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டுவது சரியல்ல.

*137 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் பாதைகள் பராமரிப்பு வேலைக்காக 1961-62-ம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(இ) இதுவரை எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Rs. 6,61,000.

(b) A sum of Rs. 7,28,200 has been spent during 1961–62.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், நீலகிரியில் இருக்கக்கூடிய ரோடுகளை எல்லாம் தார் ரோடாகப் போட்டால்தான் நன்றாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களும் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். அம்மாதிரி ரோடுகளைத் தார் ரோடாகப் போடுவதற்கு 6 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கியிருப்பதால், அது மிகமிகக் குறைவாக இருக்கும் என்ற காரணத்தினால் அதைக் குறைந்தது 3 மடங்காவது உயர்த்தவேண்டும், அதாவது 18 லட்சமாவது உயர்த்தவேண்டும், அப்போதுதான் அங்கேயுள்ள ரோடுகளைச் செப்பனிடமுடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலாவது வகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : கனம் அங்கத்தினர் 3 மடங்காகத் தான் ஆக்க வேண்டும் என்கிறார். என்னைப் பொறுத்த வரையில் எத்தனை மடங்கு ஆனாலும் சரி எல்லா ரோடுகளையும் உயர்ந்த ரக ரோடுகளாக உடனே ஆக்கிவிடவேண்டும் என்பது அபிப்பிராயம். ஆனால் அதற்கு நமக்குப்போதுமான பொருளாதார வசதி, நிபுணர்கள் வசதி எல்லாம் வேண்டும். இவற்றையெல்லாம் மனதில் வைத்துப் பார்க்கிறபோது நீலகிரி ஜில்லாவைப் பொறுத்து ஒதுக்கப்பட்ட தொகை நல்ல வகையில் செலவழிக்கப்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த

வரையில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது, ரோடுகளை தார் ரோடாக மாற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை சர்க்கார் உணர்ந்திருக்கிறது.

* 138 *Q.*—Sri R. RANGASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the scheme for the formation of the road to Panrimalai in Dindigul taluk has been included in the Third Five-Year Plan; and

(*b*) if so, priority given therefor?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) The question of including this work in the Third Five-Year Plan under the Central Aid Programme for development of roads of economic or inter-State importance is under correspondence with the Government of India.

திரு. ஆர். ரங்கசாமி : கோடைக்கானல் மலையில்—திண்டுக்கல் வட்டத்திற்குக் கீழ்ப் பகுதியிலுள்ள சோளக்காடு, பன்றிமலை போன்ற பெரும் பகுதி எந்தவிதமான வசதியும் இல்லாததனால்—மற்ற இடங்களில் போடப்பட்ட ரோடுகளை தார் ரோடாக மாற்று வதற்குப் பணத்தைச் செலவழிப்பதைக் காட்டிலும், ரோடு வசதியே இல்லாத இந்தப் பகுதிகளில் ரோடுகளை முதலில் போட்டுக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : ரோடு வசதியே இல்லாத பகுதி களுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தவேண்டுமென்ற நோக் கத்தினால் தான் இதுபோன்ற திட்டங்களை அரசாங்கம் பரிசீலனை செய்து, அதற்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்யவேண்டும் என்று கோரியிருக்கிறோம். அவர்களது அங்கீகாரமும், நிதி உதவியும் கிடைத்தவுடன் இந்த வேலைகள் எல்லாம் உடனே துவங்கப்படும்.

நகராட்சிகளின் காலம் நிர்ணயித்தல்.

* 139 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியனின் காலம் ஐந்து ஆண்டுகள் என்று இருக்கும்போது நகராட்சிகளின் காலம் மட்டும் மூன்று ஆண்டுகளாக இருப்பதின் காரணமென்ன?

(இ) இதன் பதவிக் காலத்தையும் ஐந்து ஆண்டுகளாக நீடிக்க அரசாங்கம் ஆலோசித்து வருகிறதா? அதன் முடிவு என்ன?

The Hon. Sri S. M. A. MAJID : (*a*) & (*b*) No specific reason can be furnished for fixing the term of office of the Municipal Councils as three years. However, the question of enhancing the term of office of the Municipal Councils from three to five years is under consideration of the Government. A decision has not so far been reached in the matter.